தமிழ் நாடு அரசு

<u>சுருக்கம்</u>

29 AUG
18.9.

கல்வித்தகுதி – பொதுப்பணிகளில் நியமனம் செய்ய அண்ணா மேலாண்மை கழகத்தால் வழங்கப்படும் நிர்வாகம் மற்றும் கணிப்பொறியில் முதுநிலை பட்டயப்படிப்பு (PG Diploma in Management and Computers ) – சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் முதுநிலை வணிக நிர்வாக பட்டயப் படிப்புக்கு (PG Diploma in M.B.A. ) சமமாக கருதி அங்கீகாரம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசு ஆணை நிலை எண். 219 ~~070810~~ நாள்:- 27.8.1997

படிக்கப்பட்டது:-

1. அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஆர்)துறை, நாள். 20.12.93.
2. அண்ணா மேலாண்மை கழக இயக்குநரது கடித எண்.49/94 நாள். 1.3.94
3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையச் செயலரின் கடித எண்.6190/RND/A5/93, நாள்.22.5.97.

-------

<u>ஆணை</u>:

அண்ணா மேலாண்மை கழகத்தால் வழங்கப்படும் நிர்வாகம் மற்றும் கணிப்பொறியில் முதுநிலை பட்டயப்படிப்பை (பகுதி நேர படிப்பு) ( P.G.Diploma in Management and Computers ) பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகாரம் செய்யுமாறு சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை கழக இயக்குநர் ( Director of Anna Institute of Management, Chennai ) கேட்டுள்ளார்.

2. அண்ணா மேலாண்மை கழகத்தின் இயக்குநரது கோரிக்கையை, அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள்.20.12.93-ன் மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தில் இதற்கென அமைக்கப்பட்ட குழுவின் ( Committee) முன்னர் பரிசீலனைக்காக வைக்கப்பட்டது.

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் 11.4.97 அன்று நடந்த மேற்சொன்ன குழுக் கூட்டத்தில் அண்ணா மேலாண்மை கழகத்தால் நிர்வாகம் மற்றும் கணிப்பொறியில் வழங்கப்படும் முதுநிலை பட்டயப் படிப்பை, சென்னை பல்கலை கழகத்தால் வணிக நிர்வாகத்தில் வழங்கப்படும் முதுநிலை பட்டயப் படிப்புக்கு சமமானதாக கருதி, இக்கல்வி தகுதிக்குரிய வேலைகளுக்கு மட்டும் அங்கீகாரம் அளிக்கலாம் என குழு தீர்மானித்து அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, அரசு சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை கழகத்தால் "நிர்வாகம் மற்றும் கணிப்பொறியில் வழங்கப்படும் முதுநிலை பட்டயப் படிப்பை ( PG Diploma in Management and Computers) சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் முதுநிலை வணிக நிருவாக பட்டயப் படிப்புக்கு ( PG Diploma in M.B.A. ) சமமாகக் கருதி இக்கல்வி தகுதிக்குரிய வேலைகளுக்கு மட்டும் அங்கீகரிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. பாஸ்கரதாஸ்
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>:

அனைத்துச் செயலர்கள், தலைமைச் செயலகத் துறை, சென்னை-9
அனைத்துத்தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9
அனைத்து துறை தலைமை அலுவலர்கள்
அனைத்துப் பிரிவுகள், பணியாளர் & நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக்குழு, சென்னை-2
இயக்குநர், அண்ணா மேலாண்மைக் கழகம், காந்சி,
36. கிரீன்வேஸ் சாலை, சென்னை.

/பணிந்தனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

கூஉ./27.8

27/8/97